ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

**வெளியிடுபவர்** தொடர்பூட்டல் திணைக்களம்

**திகதி** 04.07.2016

## முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக பதவியேற்றுக் கொண்டார்



*முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி நாணயத் தாள்களில் பயன்படுத்துவதற்கான மாதிரிக் கையொப்பத்தினை இடுகின்றார்*

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மேதகு மைத்திரிபால சிறிசேன அவர்களினால் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கமைய முனைவர் குமாரசுவாமி இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் தலைவராகவும் தொழிற்படுவார்.

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி 1974 – 1989 வரையான காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியில் பணியாற்றியிருக்கின்றார். அவர் பொருளாதார ஆராய்ச்சி, புள்ளிவிபரவியல் மற்றும் வங்கி மேற்பார்வைத் திணைக்களங்களில் பணியாற்றியிருக்கின்றார். இக்காலப்பகுதியில் அவர் நிதி திட்டமிடல் அமைச்சிற்கு (1981 – 1989) விடுவிக்கப்பட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து முனைவர் குமாரசுவாமி 1990 இலிருந்து 2008 வரை பொதுநலவாய செயலகத்தில் பணியாற்றினார். அவர் பதவி வகித்த காலப்பகுதியில் அவர் மற்றைய பதவிகளுடன் பொருளாதார அலுவல்கள் பிரிவின் பணிப்பாளராகவும் பொது அலுவலகங்களின் செயலாளராகவும் பதவி வகித்திருக்கின்றார். அதனைத் தொடர்ந்து அவர் பொதுநலவாய செயலகத்தின் சமூக பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டப் பிரிவின் இடைக்காலப் பணிப்பாளராகவும் (2010 சனவரி – யூலை) இருந்திருக்கின்றார்.

முனைவர் குமாரசுவாமி 2013 – 2015 சனவரி வரையான காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கை ஆலோசனைக் குழுவின் உறுப்பினராகவும் இருந்திருக்கின்றார்.

முனைவர் குமாரசுவாமி அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் பன்னாட்டு வர்த்தக அமைச்சின் மதியுரையாளராக அண்மைக்காலம் வரை இருந்திருக்கிறார்.

முனைவர் குமாரசுவாமி இளமானிப் பட்டத்தினை கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்திலிருந்தும் முனைவர் பட்டத்தினை சசெக்ஸ் பல்கலைக்கழகத்திலிருந்தும் பெற்றுக்கொண்டார்.

நன்கறிந்த விளையாட்டு வீரராக இருந்த முனைவர் குமாரசுவாமி ரக்பியில் இலங்கையினையும் சிலோனிஸ் றக்பி அன்ட் வூட்போல் கிளப்பினையும் பிரதிநிதித்துவப்படுத்தியிருக்கின்றார். அவர் தமிழ் யூனியன் கிரிக்கட் மற்றும் மெய்வல்லுநர் கிளப்பிலும் விளையாடியிருக்கின்றார்.